**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 6-2021**

**PW-2**

**பெயர் :** சின்னசாமி

**த/பெ :** மாரநாயக்கர்

**தேதி :** 20.02.2024

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 2, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பிரமாணவாக்குமூலத்தில் கண்டுள்ள முகவரியில் சுமார் 30 வருடங்களாக வசித்து வந்தேன். தற்போது நான் அங்கு வசிக்கவில்லை. நான் எனது முகவரியை உறுதிபடுத்த எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் கார்ட்டை வைத்துள்ளேன். சொத்து வேண்டும் என்று கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மாரநாயக்கருக்கும் அவரது முதல் மனைவி என்று கூறப்படும் பாப்பாத்திக்கும் எப்போது யார் முன்னிலையில் திருமணமானது என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி பாப்பாத்தி எங்கு பிறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. வாதி பாப்பாத்திக்கு ஒரு சகோதரர் இருந்ததாகவும், அவர் பிறந்து 6-7 மாதத்தில் இறந்ததாகவும், தாவாவிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த குழந்தை வீட்டில் இறந்துவிட்டது. அந்த குழந்தையின் பெயர் தெரியாது. அந்த குழந்தை எப்போது இறந்து என்று எனக்கு தெரியாது. மாரநாயக்கருக்கு எப்போது எங்கு வைத்து 2வது திருமணம் நடந்தது என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி பாப்பாத்தி எனது பாதுகாப்பில் தான் வளர்ந்து வந்தார் என்றால் சரிதான். மாரநாயக்கருக்கு பாத்தியப்பட்ட பூமிகளின் காலை எண், அமைப்பு ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. மாரநாயக்கருக்கும் வாதியின் தாயரான பாப்பாத்திக்கும் திருமணம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

3. வாதி பாப்பாத்தி எனது உறவினர் என்பதாலும், மாரநாயக்கரின் சொத்துக்களை அபகரிக்கவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் மட்டும் தான் மாரநாயக்கரின் வாரிசுகள் என்றாலும், வாதி வாரிசு இல்லை என்றால் சரியல்ல.

**(மேற்படி குறுக்கு விசாரணை 9, 10ம் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.02.20 20:55:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.